# வாழ்விக்கும் வைணவம்

**ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி**
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

'ஸம்ஸ்க்ருத நாம தைவீ வாக்' என்று ஒரு பழமொழி உண்டு. வடமொழியானது தேவமொழி என்பது இதன் பொருள். தெய்விக மந்த்ரங்களைக் கொண்டிருப்பதாலும் தெய்விக விஷயங்களைப் பற்றிய பேசுவதாலும் தேவர்களுடைய உரையாடல் மொழியாக இது இருப்பதாக நம்பப் படுவதாலும் இது தேவமொழி என்று அழைக்கப்படுகிறது. ஆனால் இதைத் தேவமொழி என்று சொன்ன முன்னோர்கள் இந்த தேவமொழிக்கு ஒரு உருவச்சிலை செய்து அதை விஷ்ணு கோவில்களில் உள்ள பெருமாள் மூர்த்தங்களுக்குப் பதில் பிரதிஷ்டை செய்து வழிபடுங்கள் என்று சொல்லவில்லை. இந்த அகண்ட பாரத தேசத்தில் அன்று முதல் இன்றுவரை அப்படி ஒரு சம்பவம் நடந்ததாக எந்த வரலாறும் இல்லை. அப்படி நடந்ததாக யாரும் நிரூபிக்கவும் முடியாது.

ஆனால் இன்று தமிழகத்தில் பொது நிகழ்ச்சிகள் தொடங்கும் முன் 'நீராரும் கடலுடுத்த' என்று தொடங்கும் மொழி வணக்கப்பாடலை பாடுகிறார்கள். மொழி வணக்கம் இறை வணக்கம் ஆகுமா? ஒரு மொழிக்குக் கடவுளுக்குச் சமமான அந்தஸ்து இந்து மதத்திலோ அல்லது அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ் கணக்கு முதலிய தமிழ் இலக்கியங்களிலோ சொல்லப் பட்டிருக்கிறதா? மொழி தெய்வமாக முடியுமா? என்பது முதல் கேள்வி. மொழியை நாம் உருவாக்கு கிறோமா? நம்மை மொழி உருவாக்குகிறதா என்று சிந்திக்க வேண்டும். முதலாம் தமிழ்ச் சங்கம், இரண்டாம் தமிழ்ச் சங்கம் என்று மன்னர்கள் சங்கம் வைத்துத் தமிழை வளர்த்தார்களே தவிர, தமிழ் மொழி மன்னர்களை வளர்க்கவில்லை. 'பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை' என்று வரந்தருவார் தமிழ் மொழியைப் பற்றி குறிப்பிடுகிறார். தமிழ் தோன்றிய காலம் கல்தோன்றி மண்தோன்றாக் காலமாக இருந்தாலும் முதலில் மனிதன் தோன்றினான். அதன் பிறகு தான் மொழி தோன்றியது என்பது நாத்திகரும் ஆத்திகரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மை.

மொழி மனிதனுடைய கருத்துக்களை மற்றவர்க்கு தெரிவிப்பதற்காக ஏற்பட்ட ஒரு கருவி. அந்த மொழிக்கு இலக்கணம் இலக்கியம் என்று வரைமுறைகள் உண்டு. மொழியால் கவி புனைந்து நாடகம் எழுதி காவியங்கள் தீட்டி, அதை மனிதன்தான் வாழ வைக்கிறான். ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசும் மக்கள் அனைவரும் அந்த மொழியை இனிமேல் பேசுவதில்லை

என்று ஒருநாள் தீர்மானம் எடுத்து முடிவு செய்தார்களேயாகில் அன்றோடு அந்த மொழியின் ஆயுள் முடிந்து விடும். இப்படித் தன் ஆயுளையே வளர்த்துக் கொள்ள முடியாத ஒரு மொழி, அதைப் பேசும் மனிதனுக்கு ஆயுள் ஆரோக்யம், ஐஸ்வர்யம் முதலிய செல்வங்களைத் தரும் தெய்வமாக இருக்க முடியுமா?

மொழிகளுக்கெல்லாம் அதிதேவதையான சரஸ்வதியைத் தான் நாங்கள் தமிழ்த் தாய் வாழ்த்து என்ற பெயரால் வணங்குகிறோம் என்று சொல்வதானால் அந்த வணக்கத்துக்கு 'நாமகள் துதி' என்றல்லவா பெயர் இருக்க வேண்டும்? ஆனால் அந்த வணக்கப்பாடலில் நாமகளின் பெயரே இல்லையே! தமிழ் மொழிக்கு, தாய்மை அந்தஸ்து கொடுத்து தமிழ்த்தாய் என்று கூறுவதானால் இப்படியே மற்றமற்ற மாநிலத்தவரும் மலையாளத் தாய், தெலுங்குத் தாய், கன்னடத்தாய் என்று சொல்ல மாட்டார்களா? அப்படிப் பார்த்தால் உலகில் எட்தனை மொழிகள் உண்டோ அட்தனை தாய்கள் உண்டு தானே?! இங்கிலீஷ் தாய், லத்தீன் தாய், ஜெர்மன் தாய் என்று இப்படி அடுக்கிக் கொண்டே போனால் இத்தனைத் தாய்களுக்கும் தெய்வ அந்தஸ்து எந்த மதத்தில் கொடுக்கப் பட்டிருக்கிறது? பாரதத்தின் பெரும்பான்மை மக்கள் கடைப்பிடிக்கும் இந்துமத நெறியில் முப்பத்து முக்கோடி தேவர்களைப் பற்றித் தான் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வரிசையில் இந்த மொழித் தாய்மார்களுக்கு என்ன இடம் நீங்கள் கொடுப்பீர்கள்?

ஒரு மொழி – அதைப் பெண்பாலாகவே வைத்துக் கொள்வோம் – மனிதனுக்கு தாயா? மகளா? அது தாய் என்றால் அந்தந்த மனிதனைப் பெற்றெடுத்த நிஜத் தாய்க்கு என்ன பெயர்? தாய்நாடு என்று சொல்கிறோமென்றால் மண்ணில் விளையும் பயிர்களாலும், வசிப்பதற்கு இடம் கொடுப்பதாலும், ரிஷிகளும் மஹான்களும் தோன்றி வாழ்ந்த மண் என்பதாலும், நம் உயிரைப் போக்ஷிப்பதாலும் நாட்டுக்குத் தாய்மை அந்தஸ்து கொடுத்து வணங்குகிறோம். இவற்றில் எந்த நியாயமான காரணமாவது ஒரு மொழிக்கு சாதகமாகச் சொல்ல முடியுமா? தாய் முதலில் சொல்லித் தருவதால் தாய்மொழி என்கிறோம்.

நம் நாட்டில் பெரியோர்கள் கற்பித்த ஒவ்வொரு வகையான பக்திக்கும், மூல காரணம் உண்டு. உயிரைக் கொடுத்து நாம் பிறக்க காரணமாய் இருப்பதால் தந்தையை வணங்க வேண்டுமென்று பித்ரு பக்தியை போதித்தார்கள். பத்துமாதம் வயிற்றிலே சுமந்து நம் உடலை வளர்த்து நம்மை ஈன்று வளர்ப்பதால் தாயை வணங்க வேண்டும் என்று மாத்ரு பக்தியைச் சொன்னார்கள். அறிவுக் கண்ணைத் திறந்து ஞானத்தைக் கொடுப்பதால் குருபக்தியை வலியுறுத்தினார்கள். தேசத்தைப் பாதுகாப்பதால் ராஜபக்தியை வலியுறுத்தினார்கள். நம் இந்து சனாதன தர்மத்தைக் காலம் காலமாகப் போற்றி வளர்ப்பதால் தேசபக்தி அவசியம் என்றார்கள். ஆனால் என்ன காரணத்திற்காக ஒரு மொழியை கடவுள் வணக்கம் என்ற பெயரால் வணங்க வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. எந்தச் சாத்திரமும் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை.

நாத ப்ரம்பம் என்று இறைவனை வழிபட்ட ஸ்ரீதியாகராஜ ஸ்வாமிகள் போன்றோரும், நாதத்தில் உள்ள புனிதமான ராகங்கள் பீஜ மந்திரங்கள் தெய்வ நாமாக்கள் ஆகியவற்றை மனதில் வைத்துத்தான் அப்படிச் சொன்னார்களே தவிர வெறும் மொழியை இறைவனாக வணங்கும்படி அவர்கள் ஒரு கீர்த்தனை கூட பாடவில்லை. தமிழ் மொழியில் உள்ள – ஏன் எந்த மொழியாகட்டுமே – அதில் உள்ள ஆபாச வார்த்தைகளைப் பொறுக்கி ஆயிரம் ஆபாச சொற்களை அடுக்கி அதை நாத பிரம்மம் என்று நாம் வழிப்பட்டால் அது அறிவுடைய செயல் ஆகுமா? ஒரு மொழி என்பது கருத்துக்களைத் தெரிவிக்கும் கருவி மட்டுமே. அதில் அளவுக்கு மீறிப் பற்று வைப்பது தேவையில்லாத இனவெறியைத் தான் தூண்டிவிடும். மொழியின் அடிப்படையில் கூட்டம் கூட்டமாக குழுக்கள் பிரிவதும் தன் மொழி உயர்ந்தது பிறமொழி தாழ்ந்தது என்று பேசுவதும் தேவையில்லாத சமூகச் சண்டைகளைத் தானே ஏற்படுத்தும்!

தாய்மொழிப் பற்று என்பது வெறித்தனமாக இருக்க வேண்டும் என்று சிலர் பிரச்சாரம் செய்கிறார்கள். வெறி பிடிப்பதென்பது மனிதர்களுக்கு ஏற்படும் நோயல்லவே. அது ஏதோ ஒருவகை விலங்குக்குத் தானே உண்டாகும்! 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்' என்று பாடிய பாரதியார்க்காவது நான்கைந்து மொழிகள் தெரியும். அதை வழி மொழிந்து அந்த வரிகளை மேற்கோள் காட்டி இன்று மேடையில் முழங்குவோர்களுக்கு தமிழைத் தவிர வேறு மொழி தெரியாது என்பது தான் வேடிக்கை. தனித் தமிழ் ஆர்வலர்களில் 80 சதவிகிதத்திற்கு மேற்பட்டோருக்கு தமிழைத் தவிர வேறுமொழிகள் தெரிவதில்லை. தமிழ் மீது அன்பிருந்தால் அதற்காக மற்ற மொழிகளை வெறுக்க வேண்டுமா என்ன? இந்தியை விரட்டினார்கள்; ஆங்கிலட்தைப் பழித்தார்கள்! அதன் விளைவென்ன? இன்று இந்தியாவிலேயே இந்தி தெரியாதவன் என்ற பெருமை தமிழனுக்கு மட்டுமே உரித்தாகி விட்டது. நடுவண் அரசு உத்தியோகங்களுக்கு தமிழன் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. தமிழக எல்லையைத் தாண்டி மற்ற மாநிலங்களுக்குச் சென்றால் தமிழன் படும்பாடு பெருந்திண்டாட்டம் தான்.

அந்நிய மொழி என்பது உலகை அறிந்து கொள்ள நமக்கு பயன்படும் ஒரு பலகணி. ஜன்னலின் கதவுகளைச் சாத்திக் கொண்டால் வெளி உலகக் காட்சிகளை நாம் இழக்கிறோம். பிறரோடு பழகும் வாய்ப்பு குறைகிறது. உலகளாவிய ரீதியில் நம்மால் போட்டி போட முடிவதில்லை. தமிழ்ப் பற்று தமிழனின் முன்னேற்றத்தை தடுக்குமானால் அப்படி ஒரு பற்று அவனுக்கு தேவையில்லை. தமிழ் வாழ வேண்டுமா? தமிழன் வாழ வேண்டுமா? தமிழனை அழித்துத் தமிழை வாழ்விப்பதால் யாருக்கு என்ன பயன்?

எல்லா மொழிகளிலும் இனிமை உண்டு. அவரவர்க்கு அவரவர் மொழி இனிமையானது தான். தமிழ்மொழி தான் இனிமையானது என்று சொன்ன பாரதியாரும் 'சுந்தர தெலுங்கினில் பாட்டிசைப்போம்' என்று பாடவில்லையா?